**ஆரம்ப கட்ட சுகாதார பராமரிப்பு சேவை முறைமையினை வலுப்படுத்தும் செயற்திட்டம் - கூறு II - 2019**

---

ஆரம்ப கட்ட சுகாதார பராமரிப்பு சேவை முறைமையினை வலுப்படுத்தும் செயற்திட்டம் - கூறு II இன் 2019 பெப்ரவரி 01 முதல் 2019 திசெம்பர் 31 வரையிலன முதலாவது கணக்கீட்டு காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பன்னாட்டு புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு வங்கிக்கும் இடையில் முறையே கைச்சாத்திடப்பட்ட 2018 மே 16 ஆம் திகதியிடப்பட்ட 8878 எல்.கே இலக்க கடன் உடன்படிக்கையில் உள்ள II ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியிடல் மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னர் சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு தற்போதைய சுகாதார அமைச்சானது மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டு அமைச்சு தற்போதைய அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுடன் இணைந்து செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கலுக்கான நிறுவனமாக இருக்கின்றது. நாட்டின் தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் உள்ள அதிக இடரை கொண்ட சனத்தொகை குழுக்களில் உள்ள தொற்றா நோய்களை முக்கியமாக கண்டறிந்து முகாமை செய்வதுடன் ஆரம்ப கட்ட சுகாதார பராமரிப்பு சேவைகளின் பயன்பாடு மற்றும் தரத்தினை அதிகரிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோள் ஆகும். செயற்திட்டத்தின் செயல் நடவடிக்கைகள் மூன்று கூறுகளின் கீழ் செயற்படுத்தப்படுகின்றன. அவையாவன, (அ) ஆரம்ப கட்ட சுகாதார பராமரிப்பு சேவை முறைமையினை பலப்படுத்தும் உத்திகளை செயல்டுத்துதல் (ஆ) அமுல்படுத்துவதற்கான ஆதரவு மற்றும் புத்தாக்க மானியங்கள் மற்றும் (இ) நிச்சயமற்ற அவசரகால நிலைமை பதிலளிப்பு. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டு கிரயம் ரூபா 697,936.86 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 4419 மில்லியன் ஆகும். அவற்றில் ரூபா 31,588 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியன் பன்னாட்டு புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு வங்கியினால் நிதியளிப்புச்செய்வதற்கு உடன்பட்டது. அவற்றில் ரூபா 2,245.12 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 14.22 மில்லியன் செயற்திட்டத்தின் கூறு II கீழ் மேற்கொள்ளப்படும் செயற்திட்ட அமுலாக்க ஆதரவு மற்றும் புத்தாக்க மானியங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 பெப்ரவரி 01 இல் தொடங்கி இருந்ததும் 2023 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பெறுகை மற்றும் கொடுப்பனவுகள் கணக்கினையும் அதன் காசுப் பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில்

நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை

பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது நான் அடையாளம் காணும் யாதேனும் உள்ளகக் கட்டுப்பாட்டில் உள்ள குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உட்பட, குறிப்பிடத்தக்க கனக்காய்வு கண்டுபிடிப்புக்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆளுகைக்கு உட்பட்ட நபர்களுடன் நான் தொடர்பு கொள்கிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு பிரச்சனை | விளைவு | முகாமைத்துவ கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 64 ஆம் பந்தியின் பிரகாரம், மத்திய மட்டம் மற்றும் மாகாண மட்டத்தினால் செய்யப்பட்ட செலவுகளை பிரதிபலிக்கின்ற இரண்டு வெவ்வேறான நிதிக்கூற்றுக்களையும் செயற்திட்டம் கூறு - 1 இன் கீழான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் என்பன செயற்திட்ட அலுவலகத்தால் தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், செயற்திட்டத்தினால் இரண்டு வெவ்வேறான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் தேவைப் பாடுகளின் பிரகாரம் இணங்காமை | நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது இன்னும் நடந்து கொண்டிருக்கின்றது | மத்திய மட்டம் மற்றும் மாகாண மட்டத்தினால் செய்யப்பட்ட சுகாதார துறைசார் செலவுகளை பிரதிபலிக்கின்ற இரண்டு வெவ்வேறான நிதிக் கூற்றுக்களையும் ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களையும் தயாரித்து எவ்வித தாமதமுமின்றி கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணங்காமைகள் | தாக்கங்கள் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| | ----------------- | -------------------- | ------------ | ------------------------- | --------------- |
| (அ) | 2019 மார்ச் 05 இன் 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தி | செயற்திட்ட வழிநடாத்தல் குழுவானது இரண்டு மாதங்களில் குறைந்த பட்சம் ஒரு தடவையாவது ஒன்றுகூட வேண்டியிருந்த போதிலும், இந்த காலப்பகுதியின் போது குழுவானது இரண்டு சந்தர்ப்பங்களில் மாத்திரம் ஒன்றுகூடியிருந்தது. மேலும், குழுவிற்கு நியமனம் செய்யப்பட்ட 26 அங்கத்தவர்களில் கூட்டங்களில் அங்கத்தவர்களின் சராசரி பங்கேற்பானது 54 சதவீதத்தை விட குறைவாக இருந்தது. | குழுவை அமைத்ததன் நோக்கங்களை அடைய தவறியமை. | கடமைகளின் பரபரப்பு தன்மை காரணமாக இரண்டு செயலாளர்களிடம் இருந்து திகதியொன்றை பெற்றுக்கொள்வது சிரமமாக இருந்தது. குழுவின் அங்கத்தவர்களின் வருகையானது எதிர்பார்த்த அளவிற்கு இருக்கவில்லை மற்றும் பங்கேற்பினை அதிகரிப்பதற்கு மாகாண அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடப்படும். | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் களின் பிரகாரம் செயற்திட்ட வழிகாட்டல் குழு கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டியதுடன் குழுவின் அங்கத்தவர் களின் பங்கேற்பினை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 1989 நவம்பர் 30 திகதியிடப்பட்ட PM/PS/05 ஆம் இலக்க பிரதம அமைச்சர் அலுவலக சுற்றறிக்கை | வெளிநாட்டு பயணங்களின் பின்னர் தீவுக்கு திரும்பும் உத்தியோகத்தர் களால் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், தாய்லாந்து, கொஸ்தாரிகா மற்றும் சீன சுற்றுப் பயணங்களில் | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் களை மீறியமை. | அமைச்சின் செயலாளருக்கு தெரிவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. | தாமதமின்றி அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | விஜயம் செய்திருந்த 27 உத்தியோகத்தர்களால் அவ்வாறான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (இ) | 2015 மே 15 ஆந் திகதியிடப்பட்ட MF/6/1/1/2015 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கை | அமைய செலவு படிகள் ஒரு நாளைக்கு ஐ.அ.டொலர் 40 செலுத்தப்பட முடியும் என்ற போதிலும், கொஸ்டாரிகா மற்றும் சீனாவில் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகளுக்காக பங்கேற்ற 11 உத்தியோகத்தர்களுக்கு முறையே ஐ.அ.டொலர் 3,850 மற்றும் ஐ.அ.டொலர் 210 தொகையொன்று அதிகமாக செலுத்தப்பட்டிருந்தது | சுற்றறிக்கையிலுள்ள அறிவுறுத்தல்களை மீறியமை. | அதிகப்படியான கொடுப்பனவுகளை மீளப் பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அதிகப்படியான கொடுப்பனவுகளை மீளப் பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயல்திட்டத்தின் நடவடிக்கைகளை தொடங்குவதில் உள்ள தாமதங்கள்

| கணக்காய்வு பிரச்சனை | விளைவு | முகாமைத்துவ கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணங்களின் 59 ஆம் பந்தியின் பிரகாரம், ஐ.அ.டொலர் 5 மில்லியன் ஒதுக்கீட்டு பெறுமதியொன்றில் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான செயற்திட்ட மீளாய்வு குழுவினதும் செயற்திட்ட வழிகாட்டல் குழுவினதும் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தினை வகுப்பதில் தோல்வி மற்றும் சரியான நேரத்தில் அதனை செயல்படுத்தவில்லை. | செயற் திட்டத்திற்கான பொருத்தமான நிகழ்ச்சித் திட்டத்தினை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | செயல்படுத்துவதற்கு முன்னர் நிகழ்ச்சித்திட்டம் அங்கீகரிக்கப்படல் வேண்டும். |